## நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் - 2017

---

நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தின் 40 (3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

2012-2016 காலப்பகுதியினுள் தேயிலை வர்ணங்களை தரப்படுத்தும் பொறி உற்பத்தி ஆராய்ச்சி செயற்றிட்டம் பொருட்டு நிறுவகத்தினால் உறப்பட்ட ரூபா 4,209,066 தொகையில் ஆராய்ச்சி செலவான ரூபா 363,646 தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பந்தி 47 பிரகாரம் செயலாற்றியிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தற் ஆணைக்குழுவிற்கு சேவை வழங்கியமை தொடர்பில் மீளாய்வாண்டு பொருட்டு நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 466,043 வாடகை வருமானம் கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்றிட்டமொன்று தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,545,744 பெற வேண்டியதொன்றாக கணக்குகளில் பதிவதற்குப் பதிலாக நடைபெறும் நிருமாணங்களாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தற் ஆணைக்குழுவிற்கு சேவை வழங்கும் முகமாக நிறுவகத்தினால் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் 2014 நவம்பர் முதல் 2015 யூலை வரையில் கிடைக்க வேண்டிய ரூபா 729,296 ஆன வாடகை வருமானம் 2018 ஆகஸ்ட் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 ஆண்டுகள் விஞ்சியுள்ள வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 1,926,039 ஆக இருந்ததுடன் இத்தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை,

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிசார் விளைவு ரூபா 10,164,058 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 15,287,030 விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 25,451,088 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. செயற்றிட்டங்களுக்கான செலவினங்கள் ரூபா 2,818,000 இனாலும் ஊழியர் ஊதியம் ரூபா 7,264,000 இனாலும் அதிகரித்த போதிலும், மீளாய்வாண்டின் மீண்டுவரும் மானிய பெறுவனவுகள் ரூபா 36,415,000 ஆல் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் வளர்ச்சிக்கு பிரதான காரணமாக விளங்கியது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வுசெய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 5,957,641 ஆகவிருந்த மிகை 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 9,511,887 வரை அதிகரித்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 15,287,030 குறைவினை அடைந்திருப்பினும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 10,164,058 மிகை வரையில் மீண்டும் வளர்ச்சியடைந்திருந்தது. நிதிசார் விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நிலையான சொத்துக்கள் பொருட்டான தேய்மானம் ஆகியனவற்றை மீண்டும் சீராக்கும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 71,098,467 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 123,835,922 வரை வளர்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாட்டுத்தன்மையும் மீளாய்வும்

நிறுவகத்தின் செயலாற்றல் தொடர்பிலான சோதனையின்போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தேயிலை வர்ணங்களை தரப்படுத்துவதற்கான செலவு குறைந்த பொறியொன்றை தயாரிக்கும் ஆராய்ச்சி

செயற்றிட்டம் பொருட்டு 2016 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 4,209,066 செலவினங்கள் உறப்பட்டிருந்தன. இருப்பினும், அதுவரையில் மேற்கொண்ட முறையியலில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக 2016 ஆம் ஆண்டில் இப்பொறியை தயாரிக்கும் பொருட்டு தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 8,000,000 தொகையில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருந்தது. 4 படிநிலைகளைக் கொண்ட இச்செயற்றிட்டத்தின் ஒப்பந்தம் பிரகாரம் 2017 ஆகஸ்ட் மாதமளவில் பொறியின் வேலைகளை முடிவுறுத்தி தொழில்நுட்ப ஒப்படைகளை பெற்றிருக்க வேண்டிய போதிலும் 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் இரண்டாம் படிநிலையின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

(ஆ) நிறுவகத்தின் 3 பிரிவுகளினால் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 6 கற்கைநெறிகள் பொருட்டு வளவாளர்கள் இல்லாமையும், கற்கைநெறிகள் பொருட்டு கேள்வி இல்லாமையும், கற்கைநெறி உள்ளடக்கங்களை மாற்றியமைக்காமையும் போன்ற காரணங்களினால் குறித்த கற்கைநெறிகள் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. ஊடகப் பிரிவொன்று நிறுவகத்தில் காணப்பட்ட போதிலும், நவீன தொழினுட்பம் தொடர்பிலான இத்தகைய கற்கைநெறிகளை பிரபல்யப்படுத்துவதற்காக போதியளவு வேலைத்திட்டத்தை செயற்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) நிறுவகத்தின் நூலகத்தை தன்னியக்கவாக்கும் (RFID Library Automation System) செயற்றிட்டமொன்று தகவல் தொழில்நுட்ப பிரிவுடன் ஒன்றிணைந்து தொடர்பாடல் பிரிவினால் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 93,486 செலவு உறப்பட்டிருந்தது. இருப்பினும் அது, 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகம் பொருட்டு ஒன்றிணைந்த முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை உருவாக்கும் பணி சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் 2018 ஆகஸ்ட் வரையிலும் குறித்த பணி முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பொருட் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 75,000 செலவு உறப்பட்டிருந்தது.

(உ) இலங்கைக்கு நவீன தொழினுட்பத்தை அறிமுகப்படுத்தலைத் துரிதப்படுத்துவதே நிறுவகத்தின் பிரதான குறிக்கோள் ஆனபோதிலும், நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டுள்ள பதவியினரின் இயலளவினை விருத்திசெய்வதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,700,000 நிதியேற்பாடு பயன்படுத்தப்படாதிருந்தது. மேலும், மீளாய்வாண்டு பொருட்டு மனித வளத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிறுவகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மூன்று நவீன தொழினுட்ப செயற்றிட்டங்களை மீளாய்வாண்டில் வணிகமயப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் தொழினுட்பம் எதுவும் வணிகமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புவியை கண்காணிக்கும் தரவுகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தரவுகளை பரிமாறிக்கொள்ளுதல் பொருட்டான தேசிய நிலையமொன்றை தாபிக்கும் செயற்றிட்டம் பொருட்டு நிறுவகம் சீன முகவர்நிறுவனமொன்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டிருந்ததுடன் அதற்காக எவ்வித திட்டமும் இருக்கவில்லை. அத்துடன், செயற்றிட்டத்திற்கான காணி தொடர்பான சாத்தியவள

ஆய்வு இன்றி நிறுவகத்திற்கு சட்டரீதியான உரிமையில்லாத காணி தெரிவுசெய்யப்பட்டிருப்பினும் சீன முகவர்நிறுவனம் பின்னர் மேற்கொண்ட கண்காணிப்பு விஜயங்களின்போது குறித்த காணி செயற்றிட்டம் பொருட்டு உகந்ததல்ல என்பதனால் வேறொரு காணியை தேடிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் பொருத்தமான காணியொன்றை முறையாக உரிமைமாற்றிப் பெற்று செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டிலுள்ள தேசிய வானியியல் கண்காணிப்பு செயற்றிட்டம் பொருட்டு தேவையான உபகரணமொன்றான தொலைநோக்கி இல்லாத காரணத்தினால் குறித்த செயற்றிட்டத்தின் நடவடிக்கைகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2018 பெப்ருவரி மாதத்தில் ரூபா 3,284,150 பெறுமதியான தொலைநோக்கி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருப்பினும், 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் குறித்த உபகரணமும் தர பரிசோதனை செய்யப்பட்டு இருக்காமையினால் இந்த செயற்றிட்டம் மென்மேலும் தாமதமாகியது.

(இ) விவசாய வரட்சி கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை முறைமையை அமைக்கும் செயற்றிட்டமொன்று நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பயிர்களின் உலர்ந்த தன்மையை முறைமை ஊடாக இனங்காணுதல் மற்றும் சாதாரண கண்களால் இனங்காணுதல் ஒன்றானதா என பரிசோதித்தறியும் படிநிலையில் இச்செயற்றிட்டம் காணப்படுவதுடன் சாதாரண கண்களால் கண்காணித்து தரவுகளை பெற்றுக்கொள்ளும் பணி விவசாய துறையின் 7 நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பினும் குறித்த நிறுவனங்கள் இப்பணிக்குத் தேவையான தரவுகளை வழங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. எனினும், குறித்த விவசாய நிறுவனங்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் பொருட்டு ரூபா 875,725 செலவு நிறுவகத்தினால் உறப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகமானது அதி தொழினுட்ப பாதுகாப்பு கெமரா முறைமையினை பொருத்தும் சேவைகளை வழங்குவதுடன் 2012 - 2017 காலப்பகுதியினுள் அதற்காக ஒரு கட்டளை மாத்திரம் கிடைத்திருந்தது. அதன் பொருட்டு ரூபா 8 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டிருந்ததுடன் வேறு சேவைபெறுநர்கள் பொருட்டு அச்சேவைகளை வழங்கும் வாய்ப்புக்களை தொடர்ந்தும் அதிகரித்துக் கொள்வதற்குத் தேவையான நடைமுறைகளை எடுப்பது தொடர்பில் நிறுவகம் அக்கறை காட்டியிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2012 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது காணப்படும் ரூபா 4,091,099 கொள்விலை கொண்ட இருப்புக்களில் பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத இருப்புக்களையும் மெதுவாக அசைவுறும் இருப்புக்களையும் இனங்கண்டு கையுதிர்ப்புச் செய்வதற்கு அல்லது வேறு பொருத்தமான வழிமுறை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

தொல்பொருளியல் ஆய்வு மற்றும் அகழ்தல் பொருட்டும் வேறு அரச நிறுவனங்களின் தேவைப்பாடுகள் பொருட்டும் புகைப்படங்கள் எடுப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 10,564,677 செலவுசெய்து விமானிகளற்ற விமானமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தபோதிலும் 2018 ஆகஸ்ட் மாதமளவிலேனும் அதிலிருந்து எவ்வித பயனையும் பெற்றியிருக்கவில்லை.

## 4.5 பதவியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 177 ஆகவும் உள்ளபடியான பதவியணி 102 ஆகவும் விளங்கியமையினால் 75 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் சனவரி 01 ஆம் திகதியன்று 27 பதவிகளில் 85 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், 8 பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக மட்டும் செய்தித்தாள் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 4 பதவிகளில் 18 வெற்றிடங்கள் மட்டும் இவ்வாண்டினுள் நிரப்பப்பட்டிருந்தது.

(இ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் நேரடியாக சம்பந்தப்படுகிற பதவிகளில் சில வருட காலமாக 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுதலும், குறித்த பணிகளில் பணியாளர்களை தக்கவைத்துக் கொள்வதில் சிரமம் என்பதனால் நிறுவனம் எதிர்பார்த்த குறிக்கோள்களை எய்துவதில் பாதகமாக தாக்கம் செலுத்தக்கூடும் என்பதனால் அதுதொடர்பில் காணப்படும் பிரச்சினைகளை மீளாய்வுசெய்து அப்பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவையின் அத்தியாயம் II இன் 13.3 ஆம் பிரிவு பிரகாரம், நிரந்தர நியமனம் வழங்கும் வரையில் தற்காலிக பரிகாரமொன்றாக மட்டுமே பதிற்கடமை நியமனமொன்று வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பதவி பொருட்டு முழுநேர அலுவலர் ஒருவரின் சேவை அவசியமெனின் நிரந்தர நியமனங்கள் தாமதமின்றி வழங்கப்படுதல் வேண்டும். இருப்பினும், சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் 3 பதவிகள் மற்றும் ஒரு பணிப்பாளர் பதவி பொருட்டு 2013 மற்றும் 2015 ஆண்டுகளிலிருந்து பதிற்கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆகஸ்ட் வரையிலான 5 ஆண்டு காலத்தினுள் குறித்த வெற்றிடங்கள் பொருட்டு நிரந்தரமாக ஆட்சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்களை எய்துதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செயலாற்ற வேண்டியிருப்பதுடன், மீளாய்வாண்டுக்கு ஏற்புடையதாக நவீன தொழினுட்பங்களுக்கான ஆர்தர் சி கிளாக்கு நிறுவகம் தமது விடயப்பரப்புக்கு கீழான பணிகள் சம்பந்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள், இலக்குகள் மற்றும் குறித்த இலக்குகளை அடைவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களையும், இலக்குகளின்படி அடைதலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், இலக்குகளில் அடைதலை அளவிடுவதற்கான சரியான தரவுத் தளமொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள், பயிற்றப்பட்ட ஊழியர்கள் அல்லது பௌதிக வசதிகள் என்பனவற்றின் தேவைப்பாடுகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------

### 6.1 பெறுகைகள்

-----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகை வழிகாட்டுநெறியின் 8.9.1 (ஆ) பிரகாரம், ரூபா 500,000 க்கு மேற்பட்ட பொருள் அல்லது சேவை ஒப்பந்தங்கள் பொருட்டு முறையான ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியபோதிலும் ரூபா 17,968,823 பெறுமதியான 11 பெறுகைகள் பொருட்டு உடன்படிக்கைகள் செய்திருக்கவில்லை.

(ஆ) கேட்போர்கூடம் பொருட்டு செவிப்புல, கட்புல மற்றும் வெளிச்சமூட்டும் முறைமையை (Audio Visual & Lightning System) நிறுவுதல்

----------------------------------------------------------------------------------------------

கேட்போர்கூடம் பொருட்டு செவிப்புல, கட்புல முறைமையொன்றை வழங்குதல், நிறுவுதல், சோதித்து இயக்கிக்காட்டும் ஒப்பந்தமொன்று ரூபா 6,222,011 விலைமதிப்புப் பெறுமானம்(வரியுடன்) ஒப்பந்ததாரர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(i) இத்தகைய முறைமையொன்றின் தேவைப்பாடு 2016 யூலை 22 ஆம் திகதி கட்டுப்பாட்டுப் பிரிவினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் வழங்குவதற்காக 2017 நவம்பர் வரையில் 01 ஆண்டு காலத்துக்கு மேல் கடந்திருந்தது.

(ii) ரூபா 1,127,872 முற்பணம் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் பொருட்களின் ஒரு பகுதி விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், கட்டுப்பாட்டுப் பிரிவின் தரை தேவைக்கேற்றவாறு அமைக்கப்படாமை, தேவையான தளபாடங்கள் வழங்கப்படாமை, கேட்போர்கூடத்தில் நீர்க்கசிவு ஏற்படுதல் போன்ற காரணங்களினால் 2018 ஆகஸ்ட் வரையிலும் ஏனைய பொருட்களை பொருத்தி ஒப்பந்த வேலைகளை முடிவுறுத்த முடியாதிருந்தது. இருப்பினும், இதற்கு பெறப்பட்டிருந்த செயலாற்றுகை பிணையும் 2018 ஆகஸ்ட் 22 ஆம் திகதி முடிவடைந்திருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தவிசாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) பெறுகை செயன்முறை | (i) விலைமனுக் கோரல் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டது என குறிப்பிடப்பட்டிருப்பினும் அதற்கான சான்றுகள் கோப்புக்களில் இல்லாமை. |
| | (ii) பெறுகை முன்னேற்ற அறிக்கை பெறுகைத் திட்டத்துடன் ஒப்பிடுவதற்கு ஏற்றவாறு தயாரிக்கப்படாமை. |
| | (iii) செயலாற்றுகை பிணை பெறும்போது தாமதம் ஏற்பட்டிருந்தமை. |
| | (iv) பொருள் அல்லது சேவை கொள்வனவுகளின்போது கொள்வனவுக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பிரகாரம் உரிய திகதிக்கு முன்னர் பொருள் அல்லது சேவையை வழங்குவதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் தாமதக் கட்டணம் அறவிடுவதற்குப் பதிலாக விநியோகக் காலத்தை நீடித்துக்கொடுத்தல். |
| | (v) பொருள் பெறுவனவுப்படிவம் விநியோகிக்கப்படும்போது தாமதம் ஏற்படுதலும் விநியோகிக்கப்படாத பொருள்கள் காணப்படுதலும். |
| (ஆ) முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | (i) முன்னேற்ற அறிக்கைகளின் பௌதிக முன்னேற்றம் சதவீதத்தில் காட்டப்படாமை. |
| | (ii) செயல் நடவடிக்கைத்திட்டத்தில் அடங்கிய ஒவ்வொரு செயற்பாட்டின் நிதிசார் முன்னேற்றம் முன்னேற்ற அறிக்கைகளில் வெவ்வேறாக காட்டப்படாமை. |